# சயனம் மறந்த பொழுதுகள்



பாரதி மைந்தன் - அ.கிளைம்சென்

# சயனம் மறந்த பொழுதுகள்



பாரதி மைந்தன் - அ.கிளைம்சென்

# நூல் விபரம்


| | | |
|---|---|---|
| நூலின் விபரம் | : | "சயனம் மறந்த பொழுதுகள்" |
| நூலின் வகை | : | கவிதை |
| நூலாசிரியர் | : | பாரதி மைந்தன் (அ.கிளைம்சென்) |
| பக்கங்கள் | : | 68 |
| பிரதிகள் | : | 300 |
| பதிப்புரிமை | : | ஆசிரியருக்கு |
| அட்டைப்படம் / நூல் வடிவமைப்பு | : | தீபம் பிறிண்டேர்ஸ் |
| முதற் பதிப்பு | : | பங்குனி 2022 |
| தொடர்பு | : | பாரதிமைந்தன் (அ.கிளைம்சென்)<br>பாரதி தாசன் வீதி,8ம் வட்டாரம்<br>மந்துவில்,புதுக்குடியிருப்பு<br>முல்லைத்தீவு<br>0779071472/0776584179 |
| அச்சகம் | : | 717, கே.கே.எஸ் வீதி<br>தீபம் பிறிண்டேர்ஸ், யாழ்ப்பாணம்<br>0772506234 |
| ISBN | : | 978- 624-99173-0-9 |
| விலை | : | 300/= |

# சமர்ப்பணம்

கனவு சுமந்து காதல் செய்யும்
கனவு நிறைந்த கன்னித் தமிழுக்கும்
என்னை ஈன்ற என்றன் தாய்க்கும்
அன்பை செய்தே அணைக்கும் தந்தைக்கும்
உயிராய் என்னை உலகில் உயர்த்தும்
உயிரான குடும்ப உறவுகள் உங்களுக்கும்
துன்பத்தில் நானும் துணிந்தே வாழ
இன்பம் தரும் இனிய நட்புகளுக்கும்
என்றன் வளர்ச்சியில் என்னுடன் மகிழ
அன்பாய் இணையத்தின் அவனியில் இணைந்த
இன்பம் கொண்ட இனிய உறவுகளுக்கும்
என்னை வளர்த்த என்றன் கல்லூரிக்கும்
அகரம் கற்பித்த ஆசிரிய உறவுகளுக்கும்
அகத்தில் ஏற்றி அன்பாய் சமர்ப்பிக்கிறேன்.

# ஆசியுரை



கவிஞர் பாரதி மைந்தனின்
"சயனம் மறந்த பொழுதுகள்" கவிதைத் தொகுப்பு நூலுக்கு ஆசிச்செய்தி வழங்குவதையிட்டு பெரு மகிழ்வடைகின்றேன்.

உணர்வுகளின் பாதை

துளிர் விடும் கனவுகள் போன்ற இரு கவிதை தொகுப்பு நூல்களை ஏற்கனவே வெளியீடு செய்ததோடு 50 மேற்பட்ட விருதுகளின் சொந்தக்காரர் தன்னடக்கமும் பணிவும் இவரது சிறப்பு இயல்பாகும். இவர் மூன்றாவதும் கவிதைத் தொகுப்பினையும் வெளியீடு செய்வது பெருமகிழ்ச்சியே இவரது பணிகளை மன்னார் தமிழ்ச் சங்கம் சார்பாக பாராட்டி நிற்கின்றோம் தமிழ் மீது மிகவும் பற்றுள்ள துடிப்பான இளைஞனா கவே நான் இவரைப் பார்க்கின்றேன்.

கசக்கிப் பிழிந்திட முயலாமல்
கசிந்து உருகிடும் எண்ணங்களை
கவிதையில் பதித்திடும் கவிஞனின்
சிறப்பையும் பாராட்டுவதோடு
தூரிகை தூக்கிடும் ஓவியன்போல்
உளியைப் பிடித்திடும் சிற்பியைப்போல்
வார்த்தைகள் வார்க்கின்ற கவிஞன் பாரதி மைந்தனின் இலக்கிய பயனம் தொடர மனம் நிறைந்த வாழ்த்துக்களை
தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

**என்றும் அன்புடன்**

**செந்தமிழருவி கலாநிதி**

**மஹா தர்மகுமாரக் குருக்கள் தலைவர் மன்னார் தமிழ்ச் சங்கம்**

# சயனம் மறந்தவனுக்கு அன்பு வாழ்த்து



இலங்கை தமிழ்ப்படைப்பாளர்கள் மத்தியில் கவிதை புனைபவர்கள் என்று குறிப்பிட்டு கூறக்கூடியவர்களில் ஒருவர் தம்பி பாரதி மைந்தன்

பன்முகத்தன்மையோடு ஒளிரும் அவரது கவிகள், தாய்க்கு, தாய்நாட்டுக்கு, காதலுக்கு, காதலர்க்கு, கடவுளர்களுக்கு என்று அவர் கொட்டித்தீர்க்கும் கவிகள் ஏராளம்.

ரசனையோடும், உணர்ச்சிகள் மிகுந்த தாயும், நம் மனங்களில் ஒருவித நெருடலைக் கொண்டுவரும், தற்போதைய இளையோர் சமுதாயம் இணைய உலகில் மூழ்கிக் கிடக்க சிலரே புத்தகங்களை தாங்கி உலகிற்கு புத்தொளி கொடுக்கின்றனர்.

போர்க்கால சூழலின் வடுக்களை தாங்கிய தமிழினத்தின் பிள்ளை என்ற வகையில் பாரதி மைந்தன் ஈழம் பற்றிய கவிகள் கண்ணீர் மெல்க வைக்கும் ஆற்றல் கொண்டவை, பெரும்பாலும் அவரின் அனுபவ கவிகளே அதிகம்,


அந்த வகையில் பாரதி மைந்தனின் இன்னுமொரு படைப்பாக கவிதைத்தொகுப்பாக வெளிவருகின்றது “சயனம் மறந்த பொழுதுகள்” பெயரிலேயே அத்தனை சுவாரசியத்தையும் தாங்கி வருகின்றது, உள்ளே கொட்டிக்கிடக்கும் அத்தனை கவிகள் மெய்மறந்து ரசிக்கக்கூடியவை, சயனத்தை மறந்து நாம் சற்றே நிலைகுலைய கூடிய கவிகள் அவை....

இளையோருக்கு முன் மாதிரிகையாக மேலும் பல கவிகள் படைத்து புதிய உலகை படைக்க வீறு நடை போட என் அன்பான வாழ்த்துக்களும், பிரபஞ்சத்திடம் வேண்டுதல்களும்

**ஈழநிலா**

**எழுத்தாளர்.**

# கவி மகனுக்கு அன்பு வாழ்த்து



அருமை மகன் பாரதி மைந்தனின் சயனம் மறந்த பொழுதுகள் என்ற கவிதை நூல் பிறப்பெடுத்து வருவதை நினைத்து பெருமையும் ஆனந்தமும் அடைகிறேன். ஈழ மண்வாசனை மைந்தன் ஒரு கவிஞனாக, பாடலாசிரியராக, கவியரங்கில் கவிதை பாடுனராக அத்தோடு திறமை மிகு பட்டிமன்ற பேச்சாளராகவும் தலைமை ஏற்று வழி நடத்துனராகவும் சிறந்த பேச்சாளரா கவும் பன்னாட்டு அரங்கில் சிறந்தோங்கும் ஒரு தமிழ் மகன். ஈழமண் தாக்கம் அவரின் படைப்பில் மிக ஆழமான கருத்துக்களை கண்ணுரலாம். வளர்ந்து வரும் கவிஞன். சிறந்த பண்பாளர். பாசம் நேசம் மிகுந்தவர். இவரின் படைப்புகள் தனித்துவம் வாய்ந்தவை. அருமை மிகு மகனின் நூல் வெளியிடு சிறந்தோங்கி தமிழுலகத்திற்கு சென்றடைந்து நல்வாழ்த்தினைப் பெற என்றன் மனமார்ந்த வாழ்த்தினையும் பாராட்டுக் களையும் தெரிவித்துக் கொள்கிறேன். வெற்றியுடன் வாழ்க வளர்க.

**அன்புடன்**

**அறிவழகன் முத்துசாமி**

**மலேசியா**

# கவி வித்தகனுக்கு அன்பு வாழ்த்து



கனவுகள் சுமந்த கண்களோடு, கற்பனைச் சிறகு விரித்து கார்கால மேகமென கவிதைகளைப் பொழிந்து, காலமகள் கரங்களில் தவழ்ந்திடும் துடிப்போடு எழுதுகோலை ஆறாம் விரலாக்கி எழுத்துலகில் பிரவேசித்திருக்கும் கவியுலகின் பிராணவாயு தான் “சயனம் மறந்த பொழுதுகள்” நூலின் ஆசிரியர் பாரதி மைந்தன் அவர்கள்.

எட்டுத்திக்கும் ஒலிக்கும் எம்பாட்டன் பாரதியின் அனல் தெறிக்கும் கனல் வரிகளைப் போலவே பாரதி மைந்தன் எனும் பெயருக்கு ஏற்றாற்போல் கவி படைப்பதில் வல்லவர்.

புதுக்கவிதை படைப்பதில் மட்டுமல்ல ஹைக்கூ, தன் முனைக் கவிதை, பாடல் இயற்றுதல் என பன்முகத் திறமையுடன் பார் போற்ற முத்திரை பதித்து கவியுலகில் தன் முகவரியை நிலைக்கச் செய்துள்ள கவிவித்தகர்.

எழுத்து நடையில் எதார்த்தம் மிளிர்கிறது. ஒவ்வொரு கவிதையிலும் அன்பு, அரவணைப்பு, ஆதங்கம், ஆறுதல் என அன்னைத்தமிழ் கொண்டு அழகிய சொல்லாடலுடன் மயிலிறகால் வருடும் வார்த்தை ஜாலம் புரிந்திருக்கிறார் என்றால் அது மிகையல்ல.

“கூட்டாய் வாழ்ந்த காலம் குடும்ப வாழ்வில் இல்லை ஏட்டில் மட்டும் எழுதும் எங்கள் வாழ்க்கை ஆச்சு பாட்டை சொல்லித் தரும் பாட்டி வீட்டில் இல்லை
காட்சி மட்டும் நாட்டில் காலம் மாறிப் போச்சு ”

என அற்புதமாகத் தொடங்கி அழகாகத் தொடரும் இக்கவிதையில் வாழ்வியல் எதார்த்தங்களை ஏக்கங்களோடு எடுத்தியம்பியுள்ள விதம் அருமை.

ஒரு பானை சோற்றுக்கு ஒரு சோறு பதம் என்பார்கள். அதைப் போலவே, இக்கவிதை ஒன்றே போதும் “சயனம் மறந்த பொழுதுகள்” நூலின்

கவிதைகள் அனைத்தும் ஒவ்வொருவருக் குள்ளும் இருக்கும் எண்ணக் குமுறல்களின் பிரதிபலிப்பாகவே உள்ளது என்பதை உணர முடிகிறது. அது இந்நூலுக்கான மிகப்பெரும் பலம் என்றுதான் சொல்ல வேண்டும்.

இந்நூலாசிரியரின் புதுக்கவிதைகள் ஒவ்வொன்றும் புதுமைகள் பல சமைத்து புதுயுகம் படைத்திடும் என்பதில் எவ்வித ஐயப்பாடுமில்லை. நூலாசிரியர் பாரதி மைந்தன் அவர்கள் மென்மேலும் பற்பல நூல்களை வெளியிட்டு வெற்றித் திருமகனாய் தமிழ் உலகின் தலை சிறந்த கவிஞராக வலம் வர நல்வாழ்த்துகள்.

**என்றும் அன்புடன்,**
**ரேணுகா ஸ்டாலின்,**
**பட்டிவீரன்பட்டி.**



# பாரதியின் மைந்தனுக்கு அன்பு வாழ்த்து



வளர்ந்து வருகின்ற தலைமுறைக் கவிஞர்களுள் தனக்கான தனித்துவத்தோடு பயணிக்கும் பாரதிமைந்தன்–

உண்மையில் தமிழ் சான்றோர்க்கும் பற்றாளர்களுக்கும் தமிழின் மைந்தனாகவே வளம் பெறுகிறார்.

நாளும் பல கவிதைகள் பேச்சுக்கள் என இணைய உலகில் வலம் வருகிறார்.

சிறந்த கவிப்புலமையோடு பரந்த தமிழ் திறமையோடு நிறைந்த தமிழ் ஆளுமையாக வர தமிழோடு தவமிருக்கிறார் – கவிதையோடு காதலாகிவிடுகிறார்.......!

இவரின் முகநூல் பொய்கையில் பல கவிதைகள் ஆக்கங்கள் கண்டு மகிழ்ந்ததுண்டு விடாமுயற்சியோடு எழுதுவதை கண்டு வியந்ததுண்டுசயனம் மறந்த பொழுதுகள் எனும் நூல் வெளிவருவதில் இன்னும் பல மகிழ்வுகள் மலர்கிறது இன்று....!

கவிதை எனும் பெரும் வரம் கொண்டு தமிழுக்கு தொண்டாற்ற இனிய கவிஞனுக்கு அண்ணனின் வாழ்த்துகள்.

**கவிஞர் சுபபாலா**
**பிரான்சு**

# பாரதி மைந்தன் எழுதிய
# "சயனம் மறந்த பொழுதுகள்"
# எனும் கவிதைக்கு வாழ்த்துப்பா



முகநூலில் கவியெழுதி
மனநூலில் புதைந்தவனே!
புதுநூலின் வருகையதில் அகநூலால்
வாழ்த்துகிறேன்!
தினம் நூறு கவியெழுதி
மனம் நிறைந்த புதுக்குடியிருப்பின் மைந்தனே!
கவியெனும் பயணத்தில் தொடரட்டும்
உன்பயணம்!
வளரும் கவிதை "கவியரங்கம்
"மரபுக்கவிதையென உந்தன் வரலாற்றை
மாற்றட்டும்!
எழுதும் தமிழுந்தன் எரிமலை ஆகட்டும்!
பலநூறு களம்காண மனம் நிறைந்த
வாழ்த்துக்கள்!
அகம் கொண்டு உனை வாழ்த்தும்!
உனைப் போன்று கவி எழுதும்!
உந்தன் பாசமுள்ள சகோதரி நானே!

இணுவிலூர்
ராதா குபேரன்

# அணிந்துரை



"உள்ளத்தில் உள்ளது கவிதை – இன்பம் உருவெடுப்பது கவிதை. தெள்ளத் தெளிந்த தமிழில் – உண்மை தெரிந்து உரைப்பது கவிதை ."

என்று கவிதைக்கு வரைவிலக்கணம் தந்துள்ளார் கவிமணி அவர்கள். கவிமணி ஐயாவின் வரைவிலக்கணம் சிறிது மாறாது நூலின் ஆசிரியர் . பாரதி மைந்தன் அவர்கள் தனக்கே உரிய எளிய நடையில் அனைவருக்கும் சென்று சேரும் வகையில் இக்கவிதை நூலினை யாத்துள்ளார் .இந்நூலுக்கு அணிந்துரையும் வாழ்த்துரையும் தருமாறு அன்புடன் என்னிடம் வேண்டிக் கொண்டார் . என் மரபு மாணாக்கரும் சிறந்த முறையில் ஒவ்வொரு பாவகைகளையும் இலக்கணத்தையும் கற்று வருபவருமாகிய பாரதி மைந்தன் இந்நூல் முழுவதும் சமூகம் சார்ந்த உணர்வுப்பூர்ணமான கருத்துகளை வலியுறுத்தும் வகையில் பல்வேறு தலைப்புகளில் கவிதைகளை எழுதியுள்ளார் .

அன்பினை , காதலினை , இறைமையினை , ஈழத்து உணர்வுகளை , ஈழமண்ணில் தான் பெற்ற வேதனைகளை வலிமிகுந்த வரிகளால் எடுத்துரைக்கின்றார். ஆசிரியரின் கவிதைகள் முழுவதிலும் மரபின் சாயலுடன் அழகிய சொல்லாட்சி யுடன் எதுகை மோனையுடன் மிளிர்கின்றது .

உயிரின் வரிகள் சொல்லிடவா கவிதையில் "உயிராய் ஈழக் கனவினையும் உள்ளம் நாளும் எண்ணியிங்கே துயில் மறந்து வாழ்கிறதே துரோகம் எம்மை அழித்ததாலே " என்கிறார் ஆசிரியர் . வலியின் பேருண்மை நம்மாலும் புரிந்து கொள்ள முடிகிறது.

புதிய ஆண்டே புதுமை தந்திடு கவிதையில்

"நோய்கள் இல்லா நொடிகள் தந்திடு வாய்மை வெல்ல வல்லமை கொடுத்திடு முதியோர் இல்லம் மூடியே விட்டிடு புதிய சரித்திரம் பூமியில் படைத்திடு " என்கிறார் . கவிஞரின் சமூகநோக்குப் பார்வை சிறப்பிற்குரியது .

கடவுளின் எச்சரிக்கையாக மனிதனும் இறைவனும் கவிதையில் “மனிதனை படைத்த மாண்புயர் இறைவன் மனிதம் இல்லா மக்களை கண்டே கண்ணீர் வடித்தே கவலை அடைகிறான் மண்ணில் அழிவை மக்களை திருத்த தண்டனையாய் கொடுத்தும் தடுமாறி நிற்கிறான் விண்ணே வியக்க விந்தை செய்யும் மக்களின் நவீன மாயை கண்டே சிக்கல் நீக்க சிற்றம் கொண்டே

இயற்கை அழிவை இன்றே தருகின்றான்“ என்கிறார். மக்களின் மனிதமில்லாப் பண்பினை இவ்வரிகளில் நன்றாகச் சாடியுள்ளார் .

அன்பே அமுதே கண்ணம்மா பாடலில் பாரதியின் கண்ணம்மாவை நம்மின் மனக்கண்முன் அப்படியே கொண்டு வந்து நிறுத்துகிறார் ஆசிரியர். ”அன்பே அமுதே கண்ணம்மா ஆசை வள்ளி நீயம்மா என்னைக் காக்கும் தாயம்மா என்றன் உயிரும் நீயம்மா” – என்கிறார் . என்னே அழகிய வரிகள் .

அணுகுண்டாய் வெடித்தே அறிவைத் தந்திடும் ஃ

அணுக்களைத் தீண்டும் அறிவுக் களஞ்சியம் ஃ

நித்தம் வாசித்தே நிறைவைப் பெறுவாய் ஃ

சுத்தமான மனத்துடன் சுகமாய் வாழ்வாய் ஃ – வாசிப்பை நேசிக்கச் சொல்லும் அற்புத வரிகள்.

இயற்கையைக் காதலியாக்கிப் போற்றும் பாங்கிலே கவிஞரின் கவித்துவம் வெளியாகிறது .பலவிடங்களில் உணர்வினை கிளர்ந்தெழச் செய்கிறது . அகிம்சை வழியில் அறத்தை நிறுத்தி மகிழ்வாய் நாளும் வாழச் செய்தல் வேண்டுமென்கிறார் கவிஞர் . இந்நூலின் ஆசிரியர் . இளைஞராக இருந்தாலும் காந்திய வழியில் அகிம்சை நெறியை வலியுறுத்தும் பாங்கில் தீர்க்கதரிசியாகவே மாறியுள்ளார் . நான் ரசித்த சில வரிகள் உங்கள் முன்னே அகிம்சை யுத்தம் அன்புடன் செய்தே மகிழ்ச்சி கொண்டே மாண்பாய் காப்பாய் காந்தி வாழ்வை கருணை கொண்டே சாந்தமாய் வாழ்வில் சாதித்தே காட்டு உறங்க மறுக்கும் விழிகளில் வாழ்ந்து கொண்டிருக்கும் உயிரோட்ட வரிகள் இதோ

விழிகள் சயனத்தை விரும்பவும் மறுக்கிறது விழியில் உன்னை வின்பமாய் சுமக்கவே காதல் உயிரின் கன்னியே சாதலும் சரித்திரம் சர்வமும் நீயே ” – என்கிறார் ஆசிரியர் .

பாட்டி சொன்ன பாடம் எல்லாம் காட்டி விட்டே காலம் செல்ல காட்டில் நாளும் யுத்தம் என்றே ஏட்டில் காட்டி எண்ண வைத்தான் . என்கிறார் அற்புதக் கவிஞர் பாரதி மைந்தன் அவர்கள் .அதோடு மட்டுமின்றி ”பெண்ணே நீயும் பொம்மை இல்லை ” என்று பெண்மைக்குக் குரல் கொடுக்கும் ஆண்மகனாக இலட்சிய மனிதராக மாறியுள்ளார் . ஈழ தேசத்தின் கனவுகள்

“அரிக்கண் லாம்பு அணைந்தே கிடக்க கரியாய் மாறிய காட்சி காண்பாய் “ என்ற வரிகளில் வறுமையின் உச்சம் தெரிகிறது. ஈழ தேசத்தின் கனவுகள் என்ற கவிதையில் வரிவரியாக உணர்ச்சிமிக்க சொல்லாடல்கள் பலவற்றை நம்மால் காண முடிகிறது .

அன்னையைப் போற்றும் கவிதைகள் , தாயகத்தையும் தாய்மொழியையும் போற்றும் கவிதைகள் , அன்பினைப் போற்றும் கவிதைகள் என அடுக்கிக் கொண்டே போகலாம் .

“கூட்டாய் வாழ்ந்த காலம் குடும்ப வாழ்வில் இல்லை ஏட்டில் மட்டும் எழுதும் எங்கள் வாழ்க்கை ஆச்சு “ – கூட்டுக் குடும்பத்தின் மகிழ்ச்சியினை எடுத்துரைக்கிறார் கவிஞர் . ஓரிடம் , அதிலும் அன்னையின் கூற்றாக ,

“என்னை மறந்த உன்னை என்றும் மறவேன் நானே அன்பாய் கருவில் சுமந்த அன்னை நானே அறிவாய் உன்றன் பிள்ளை வாழ்வில் உன்னை மறக்க முன்னே உன்றன் வாழ்வை மாற்றி உலக சிறையை அகற்று“ என்னவொரு அற்புதமான வரிகள் அனைத்துமே மாச்சீர்களால் கோர்த்த அழகிய அறுசீர் விருத்தப்பா .

நட்பினைப் போற்றும் வகையில் சில வரிகளை தம் கவிதை நூலில் விதைத்திருக்கிறார் நூலாசிரியர் .

“நட்பாய் வாழும் உறவு நாளும் தருமே இனிமை சிட்டாய் பறக்க வாழ்வில் சிகரம் காட்டும் அதுவே ” – சிகரத்தைக் காட்டுகின்ற நட்பினைச் சிறப்பித்திருக்கிறார் நூலாசிரியர் பாரதி மைந்தன் அவர்கள் .

உதவ மறுப்பவர் முன்னே உதவி செய்து காட்டு என்கிறார் ஆசிரியர் .

இப்படியாக , நான் ஒரு மலர்ச்சோலைக்குள் உலவிவந்த மனநிறைவு என்னுள் மேலிட , நறுமணம் நிறைந்த மலர்களுள் , அழகு நிறைந்த மலர்களுள் , வண்ணவண்ண மலர்களுள் எந்தவொன்றைச் சிறப்பு என்று

பிரித்துணர முடியாத பொழுதுகளில் என் நெஞ்சம் முழுவதும் மரபின் சாயலோடு , கருத்துச் செறிவோடு இருக்கின்ற அனைத்துப் பாக்களும் என்னுள் விரவுதலை என்னால் உணர முடிந்தது என்பதே கண்கூடு .

மரபினைக் கற்றுத் தந்த ஆசானாக மிகுந்த மகிழ்ச்சியோடும் பேரன்போடும் மனதார கவிஞர். பாரதி மைந்தனை மனதார வாழ்த்துகின்றேன். இன்னும் பல நூல்களை யாத்து சாதனைச் சிகரமாக மிளிர்ந்திட என்னுடைய மாணாக்கருக்கு ஆழ் மனத்திலிருந்து ஆசிகளை வழங்கி வாழ்த்துகின்றேன் .

என்றும் அன்புடன் பாவலர். சரஸ்வதி பாஸ்கரன் , மரபிலக்கணப் பயிற்சி ஆசிரியை. இலண்டன் பாமுகம் தொலைகாட்சி , தமிழ்ப்பட்டறை இலக்கியப் பேரவை அமெரிக்கா முத்தமிழ் இலக்கியப் பேரவை தமிழ் அமெரிக்கா தொலைகாட்சி , நெதர்லாந்து சூரியத்தமிழ்த் தொலைக்காட்சி.

**வேதியியல் துறை & கல்வியியல் துறை சிறப்பு பேராசிரியர்**
**ஆலோசகர் மற்றும் வழிகாட்டி ,**
**திருச்சி , தமிழ்நாடு**

# சயனத்தின் பொழுதிலும் கிறுக்கும் கிறுக்கல்



சயனம் மறந்த அழகான பொழுது சாதிக்கும் எண்ணத்தை நெஞ்சினில் தரவே தடைகளையும் உடைத்தே தாயும் தந்தையும் ஊட்டிய தன்னம்பிக்கை கொண்டே பயணிக்கும் அழகிய பொழுதில் உருவாகிய படைப்பே இந்த ”சயனம் மறந்த பொழுதுகள்” மூன்று வருட இடைவெளியின் பின் அன்பான உறவுகள் உங்களின் அன்பால் இன்று பிரசவம் காண்பது இன்பத்தை தந்தே நிற்கிறது அத்தனையும் உங்கள் அனைவரின் உற்சாகத்தால் விளைந்ததே உறவுகளே உங்களுக்கே முதல் நன்றி பாதம் பணிந்தே கூறுகின்றேன்.

ஒரு தாய் கருவில் சுமக்கும் ஒரு குழந்தையின் முகம் காண எத்தனை இரவுகளில் தன் தூக்கத்தை தொலைத்திருப்பாள் அத்தனை உணர்வுகளையும் இந்த நூலை உருவாக்கும் அந்த பொழுதுகளில் நானும் சிறிது சயனம் மறந்து உணர்ந்தே இருக்கின்றேன். அந்த நொடிகளில் என் தாய் தந்தையின் தியாகத்தை எண்ணி கண்ணீரும் வடித்திருக்கின்றேன் இருந்தும் வேதனை என்னை அகன்றதாய் இல்லை இன்றும் மனதில் பல கேள்விகளைக் கேட்டு என்னை நானே உணரவும் வைக்கிறது .சயனம் மறந்த பொழுதுகள் இன்றும் என் தாய் தந்தையை எண்ணி என் வாழ்வில் தொடர்கிறது சுமைகளாய் நான் இருக்கும் அந்த நொடிகளை எண்ணி இன்று என் நெஞ்சம் வலிக்கிறது இருந்தும் உங்கள் உள்ளம் என்னை சுகமாகவே எண்ணும் என்று இருந்தும் கட்டி அணைத்தே கண்ணீருடன் கூறுகின்றேன் முதல் நன்றிகளை கூறியே நிற்பதுடன்

சயனம் மறந்த இனிய பொழுதுகளில் என்னை அணைத்து அன்புடனே என்னை காத்திடும் என் குடும்ப உறவுகளுக்கும் என் நண்பர்களுக்கும் உறவுகளுக்கும் என் நன்றிகளை பரிசாக்குவதுடன் . முயற்சி செய்தும் முன்னோற துணிந்திடு வெற்றி உன்னை வந்த அணைக்கும் என்று என்னை செதுக்கி இவ்வுலகில் என்னை நடமாட விட்ட என் கல்லூரித் தாய் மன்/புனித சவேரியார் ஆண்கள் தேசிய பாடசாலை தாய்க்கு என் நன்றிகளை உரித்தாக்குவதுடன் என் கல்லூரி அதிபர் ஆசிரியர்களுக்கும் கவி உலகில் எனக்கு மரபு இலக்கணத்தை அன்புடனும் தாய் பாசத்துடனும் கற்றுத் தரும் ஆசான் சரஸ்வதி பாஸ்கரன் அவர்களுக்கும் அத்தோடு என்னை நானே வளர்க்க துணையாய் வரும் என் கவி உறவுகள் அனைவருக்கும் பாதம் வணங்கி நன்றிகளை கூறிக்கொள்வதுடன் மீண்டும் மீண்டும் நன்றி யுள்ளவானாய் நினைப்பதுடன் .

தவறிய பொழுதுகளில் பாதை காட்ட உறவு இருந்தால் சாதனை பாதை உனதாகும் என்று என்னை கரம் பிடித்து பாதை காட்டும் என் நண்பர்களுக்கும் அத்தோடு என் வளர்ச்சியில் முதல் படியாக இருக்கும் பாடசாலை, முகநூல் மற்றும் ஏனைய ஊடக நண்பர்களுக்கும் என் நன்றிகளை கூறுகின்றேன் மேலும் என் வாழ்வி உயிர் நாடியாக என்னை ஒவ்வொரு பொழுதிலும் செதுக்கும் என் உயிரான சகோதர உறவுகளுக்கும் தம்பியின் அன்பான நன்றிகளை உரித்தாக்குவதுடன் என்னை நண்பனாகவும் குடும்ப உறவாகவும் ஏற்று அன்பையும் ஆலோசனையையும் தரும் அனைத்து உறவுகளுக்கும் என் நன்றிகளை கூறியே நிற்கின்றேன்

அத்தோடு சயனம் மறந்த பொழுதுகள் நூல் உருவாக நான் பல தடைகள் பட்ட போது எனக்கு துணையாய் நின்ற அத்தனை உறவுகளுக்கும் அத்தோடு வாழ்த்துரை, வாழ்த்துக்கவி, அணிந்துரை, ஆசியுரை போன்ற வாழ்த்துக்களை தந்த அத்தனை உறவுகளையும் நன்றியுடன் நினைப்பதுடன் சினிமா துறையில் நான் சாதிக்க வேண்டும் என்று இந்தியாவில் விரைவில் வரவுள்ள தனது திரைப்படத்தில் பாடல் எழுத வாய்ப்பு தந்த அன்பு அண்ணாக்கும் நூல் உருவாக பொருளாதார உதவி செய்தவர்களுக்கும்

மேலும் என் ஒவ்வொரு பாதையிலும் உதவியாய் வரும் அனைவருக்கும் என் இதய நன்றிகளை கூறிக்கொள்வதுடன் என் சயனம் மறந்த பொழுதுகள் உங்கள் அன்பால் என்னுள் மாற்றம் தரும் என்ற நம்பிக்கையுடன் உங்களிடம் இன்நூலை தந்தே மகிழ்கிறேன்.

**அன்புடன் உங்கள் உறவு,**

**பாரதி மைந்தன்**

**புதுக்குடியிருப்பு**

**முல்லைத்தீவு**



# பொருளடக்கம்


01. உண்ர்வின் வலிகள்........ 01
02. புத்தாண்டே வருக........ 03
03. மனிதனும் இறைவனும்........ 04
04. அன்பின் கண்ணம்மா........ 06
05. வாசிப்பை நேசிப்போம்........ 07
06. துணிந்தே நின்றிடு........ 08
07. இயற்கை காதலியே........ 09
08. வாய்மையே வெல்லும்........ 10
09. என் காதலே........ 11
10. அகிம்சை யுத்தம்........ 13
11. இன்பம் தந்த வாழ்வு........ 14
12. கள்ளம் இல்லா காதல்........ 16
13. காதலைச் சொல்லிடு........ 17
14. பெண்ணே எழுந்திடு........ 18
15. உணர்வாய் நீயும்........ 19
16. ஈழ தேசத்தின் கனவுகள்........ 21
17. அன்னை வடிவே........ 23
18. உணர்வீர் வாழ்வில்........ 24
19. உறவு வாழ்வின் கருவறை அன்பியம்........ 26
20. நினைத்தால் மட்டும் இனிமை........ 29
21. சிறையை அகற்றுவிடு........ 31
22. கள்ளமில்லா மனது........ 33
23. அன்னை உருவாய்........ 35
24. யார் உண்டு........ 37
25. எந்தன் பயணம்........ 39
26. ஆயுதம் ஒன்று........ 41
27. தெய்வம் நீயே........ 42
28. மூச்சிலும் பேச்சிலும் முகவரி தமிழே........ 43
29. அன்பால் இன்று........ 46
30. தாயே மன்னித்து விடு........ 47

# 1 உணர்வின் வலிகள்

உயிரின் வலிகள் சொல்லிடவா
உணர்வின் கண்ணீர் அதுவல்லவா
பயிர்கள் எல்லாம் மடிந்திங்கே
படரை வலியாய் தந்திடவே
உயிராய் சுமந்து வாழ்கின்றோம்
உணர்வாய் நினைவை நாளுமிங்கே
உயிராய் ஈழக் கனவினையும்
உள்ளம் நாளும் எண்ணியிங்கே
துயில் மறந்து வாழ்கிறதே
துரோகம் எம்மை அழித்ததாலே
உயிராய் சுமந்த கனவுகளை
உயிரைப் பறித்தே அழித்திடவே
மயிர் இழையில் தப்பியிங்கே






மனதின் வலியை வரைகின்றேன்
துயில் மறந்து நாளுமிங்கே
துணராய் மடிந்த உயிரையேண்ணி
துயிலார் மனதும் வாடுமே
துயர் காட்சி கண்டுமிங்கே
தாயின் மடியில் உயிரிழந்த
தனையன் கதையும் ஆயிரமாய்
தாயின் நாடாம் ஈழத்தினிலே

உயிரின் உணர்வு கண்ணீராய்
உறுகண் நாளும் தந்திடவே
உயிரின் வலியும் மனதினிலே
உறக்கம் நாளும் பறித்திடவே
உயிரை இழந்த உணர்வுடனே





உறக்கம் மறந்தே நாளுமிங்கே
உயிரை பறிக்கும் நினைவுடனே
உணர்வின் வலியை சுமக்கின்றேன்
உயிராய் என்றன் உறவுகளின்
உயிரின் நினைவு சுமந்திங்கே.





# 2 புத்தாண்டே வருக

புதிய ஆண்டே புதுமை தந்திடு
மதியின் முகமாய் மலரச் செய்திடு
அன்பை நாளும் அவனியில் பரப்பிடு
துன்பம் இன்றி துலங்கிட வைத்திடு
மண்ணில் நாளும் மனிதம் விதைத்திடு
விண்ணே கண்டு வியந்திட வைத்திடு
நோய்கள் இல்லா நொடிகள் தந்திடு
வாய்மை வெல்ல வல்லமை கொடுத்திடு
முதியோர் இல்லம் மூடியே விட்டிடு
புதிய சரித்திரம் பூமியில் படைத்திடு
உதவிடும் உள்ளம் உலகில் பெருக்கிடு
உதரம் நிறைத்திட உணவைக் கொடுத்திடு
அவனியில் பொறாமை அழித்தே விட்டிடு







உவப்புடன் வாழ்த்திட ஊறுகள் நீக்கிடு
எழிமை வாழ்வை என்றும் காட்டிடு
செழிப்புடன் வாழ்வை சொர்க்கமாய் மாற்றிடு
புதுமை படைக்கவே புவியில் வந்திடு
மதுவை மனிதர் மறந்திட செய்திடு
உன்னை வணங்கி உவப்புடன் அழைக்கிறோம்
அன்பாய் கேட்டதை அவனியில் கொண்டுவா

3

# மனிதனும் இறைவனும்

மனிதனை படைத்த மாண்புயர் இறைவன்
மனிதம் இல்லா மக்களை கண்டே
கண்ணீர் வடித்தே கவலை அடைகிறான்
மண்ணில் அழிவை மக்களை திருத்த
தண்டனையாய் கொடுத்தும் தடுமாறி நிற்கிறான்
விண்ணே வியக்க விந்தை செய்யும்
மக்களின் நவீன மாயை கண்டே
சிக்கல் நீக்க சிற்றம் கொண்டே
இயற்கை அழிவை இன்றே தருகின்றான்
உயர்ச்சி நம்பி உருளும் உலகில்
கடவுளை நாளும் காணவே மறுக்கிறான்
மடமை கொண்டே மந்திரம் செய்கிறான்
படைத்த இறைவன் பார்த்தே நிற்க





படைத்ததை அழிக்கிறான் பாரில் இன்றே
யார் இறைவன் யார் மனிதன்
யார் உலகை யார் ஆள்வது
என்றே இன்று ஏட்டிக்கு போட்டி
இன்றைய உலகில் இழிவை தருகுதே
சிந்திக்க தொடங்கிடு சீற்றம் அழித்திட
சிந்தையில் இறைவனை



சித்தித்தே தொடர்ந்திடு
அன்பே இறைவன் அவனியை காப்பர்
என்றே நம்பி எளிமையாய் வாழ்ந்திடு
மனிதன் என்றும் மண்ணுக்கு இறையே
புனிதம் கொண்டே பூமியில் இறைவனை
நினைத்தே நடந்திடு நிதமும் நீயுமே
வினைகள் தீரும் விந்தை உலகில்



# 4 அன்பின் கண்ணம்மா

அன்பே அமுதே கண்ணம்மா
ஆசை வள்ளி நீயம்மா
என்னைக் காக்கும் தாயம்மா
என்றன் உயிரும் நீயம்மா
இன்பம் தந்த உயிரம்மா
இன்னல் தீர்ப்பாய் நீயம்மா
என்றும் என்றன் உயிரம்மா
என்னை ஆளும் கண்ணம்மா

வண்ணம் கொண்ட அழகம்மா
வாசம் வீசும் மலரம்மா
மண்ணில் நீயே உறவம்மா
மனதை பறித்த கண்ணம்மா
விண்ணும் வியக்கும் அழகம்மா
விடியல் நீயே எனக்கம்மா
எண்ணம் எல்லாம் நீயம்மா
என்றன் உயிரே கண்ணம்மா



# 5 வாசிப்பை நேசிப்போம்

உள்ளத்து இடுக்கையை உணர்வினால் தீண்டும்
கள்ளமான மனத்திலும் கருணையைக் கொடுக்கும்
அணுகுண்டாய் வெடித்தே அறிவைத் தந்திடும்
அணுக்களைத் தீண்டும் அறிவுக் களஞ்சியம்
நித்தம் வாசித்தே நிறைவைப் பெறுவாய்
சுத்தமான மனத்துடன் சுகமாய் வாழ்வாய்
புத்தகம் புரட்டிடப் புதிராய் வாழ்வும்
புத்தாக்கம் பெறுமே புகழைப் பெறவே
வாசிப்பை நேசி வாழ்வை மாற்றிட
வாசிப்பே தந்திடும் வசந்தம் நாளுமே.








# 6 துணிந்தே நின்றிடு

தற்புகழ் இன்றியே தரணியை வென்றிடு
சிற்பமாய் மாறியே சிதமாய் ஒளிர்ந்திடு
அஃகலில் வாழ்ந்துமே அவணியை அறிந்திடு
அஃதையாய் மாறிடும் அமயமும் வந்தாலும்
தாழ்ந்தே நடந்திடு தரணியில் நீயும்
வாழ்ந்தே வென்றிடு வையம் தனையும்
அருஞ்சிறை செய்திடும் ஆலவாய் முன்னே
அருக்கனாய் நின்றே அல்கல் செய்திடு


இகலினைக் கொண்டே இகவனை வென்றிடு
புகழைக் கண்டும் பூமியில் தாழ்ந்திடு
தூற்றும் உலகம் துணிந்தே நடந்திடு
காற்றும் உன்னை கண்டே பணிந்திடும்
அன்பைக் கொடுத்தே அவணி வென்றிடு
உன்னையே நீயும் உலகினில் அறிந்திடு
சாதனை மனிதனாய் சரித்திரம் படைத்திடு
பாதகர் முன்னே பவனியும் சென்றிடு
தாழ்ந்தே இருந்திடு தரணியில் நீயும்
வாழ்ந்தே காட்டிடு வானவர் புகழ்ந்திட



7

# இயற்கை காதலியே





தேடினேன் என்றன் தென்றலே உன்னை
நாடியே வந்தே நாணம் கண்டிட
சயனம் மறந்தே சமரும் செய்கிறேன்
மயக்கிடும் மங்கை மதியின் அழகில்
உள்ளம் என்றும் உன்னை நினைக்க
பள்ளத்தில் விழுகிறேன் பாதை தெரியாது
சாதல் கடந்தும் சடலம் ஆகிறேன்
காதல் கொண்ட கன்னி உன்னால்
இயற்கையில் காண்கிறேன் இன்பமாய் உன்னை
வியக்கவே வைத்திடும் விழிகளில் இங்கே
அன்னையாய் உன்னை அணைக்கிறேன்
உன்னை என்றன் காதலி என்றே இங்கே
என்றன் இயற்கை காதலியே
அன்பாய் காப்பேன் அண்ணல் உனையே



# ௪ வாய்மையே வெல்லும்

வாய்மை உரைத்தே வாழ்வில் சிறக்க
தூய்மை உள்ளம் துலங்கி நிற்க
பொய்கள் பேசும் பேய்கள் கூட்டம்
மெய்மை உரைத்தே மேம்பட நாளும்
நீதி நிலைத்து நெறியாய் வாழ
பாதி மனிதர் பட்ட பாட்டை
அகிம்சை வழியில் அறத்தை நிறுத்தி
மகிழ்வாய் நாளும் வாழச் செய்தே
மாய்த்து மக்கள் மரணம் கொண்டே
சாய்ந்து இங்கே சரிந்து கிடக்கும்
பேய்கள் போல போடும் ஆட்டம்
நாய்கள் போல நடத்தும் பூமி
தாய்போல் நாளும் தரணி போற்ற
தாய்மை உள்ளம் தாங்கி நின்றே
காந்தி வழியில் கொண்டோம் வெற்றி
சாந்தி அடைந்து சமாதி அடைந்தே
நீதியை வேண்டி நித்தமும்
நீதித் தாயை வேண்டி நிற்போம்





# ௧ என் காதலே



உவரி ஓரமாய் உமையவள் காட்சி
உவகையில் என்றன் உணர்வுடன் கலந்திட
சயனம் இன்றியே சமரும் செய்யுதே
புயலாய் விழிகள் புலவியை எண்ணையில்
ஏந்திழை உந்தனின் எழிலுமே கூடுதே
காந்தமாய் விழிகளும் காசினி மீதினில்
சிங்கினி ஒலியாகி சீதமும் தந்ததே
தங்கமாய் மின்னிடும் தாரகை உன்றனில்





புன்னகை சத்தமும் பூவாக மாறியே
என்றனின் தூக்கத்தை எட்டியும் உதைத்ததே
விழித்திடும் என்றனின் விழிகளும் உன்னையே
விழியின் திரையினில் வின்பமாய் காணவே
அடவியில் தொலைத்துமே அகத்தினால் தேடுதே
விடலை பருவத்தின் விந்தையான காதலால்
சயனமும் மறந்துமே சரிரமும் உருகியே
மயக்கத்தில் காதல் மங்கையைத் தேடுதே



புலரி வேளையில் புலவனும் உறங்கிட
மலராய் வார்த்தைகள் மனதினில் தோன்றிட
காவியத் தலைவிக்கு காதலைச் சொல்லவே
கவிதைகள் வடிக்கிறேன் கவிஞனாய் மாறியே
இறவியை வெறுத்தே இனியவளை அனைத்திட
அறத்தினை புகட்டினேன் அன்பாய் உன்னிடம்
அளியாய் வந்துமே அமுதத்தை பருகிட
களிப்புடன் தேடுகிறேன் கன்னி உன்னையுமே
விழிகள் சயனத்தை விரும்பவும் மறுக்கிறது
விழியில் உன்னை வின்பமாய் சுமக்கவே
காதல் உயிரின் கன்னியே
சாதலும் சரித்திரம் சர்வமும் நீயே





## 10

# அகிம்சை யுத்தம்

அகிம்சை யுத்தம் அன்புடன் செய்தே
மகிழ்ச்சி கொண்டே மாண்பாய் காப்பாய்
காந்தி வாழ்வை கருணை கொண்டே
சாந்தமாய் வாழ்வில் சாதித்தே காட்டு
விண்ணில் வாழும் வித்தகன் பார்க்க
மண்ணில் நீங்கள் மகத்தாய் வாழ்வீர்
அன்பை கொண்டே அகிம்சை வழியில்
என்றும் வாழ்வில் ஏற்றம் காண்பாய்
அறத்தை நிறுத்தி ஆட்சி செய்வாய்
இறவி கடந்தே இன்பம் சேர்ப்பாய்
காந்தி காட்டிய வாழ்வில்
ஏந்தல் கொண்டே ஏற்றம் காண்பாய்





11

# இன்பம் தந்த வாழ்வு



நானும் நீயும் நம்பி வாழ
மானும் பூவும் மாட்டிக் கொள்ள
கண்ணும் பெண்ணும் காட்சி காண
மண்ணும் தாங்கி மாட்சி சொல்லும்

ஆசை கொண்டே அன்பு செய்ய
காசை எல்லாம் வென்று தந்தே
வாழ்வை நாளும் வாழச் செய்யும்
வாழ்வில் மாற்றம் தந்தே நின்று



சின்னப் பிள்ளை சிட்டாய் வாழ
அன்பை நாளும் அம்மா ஊட்ட
கண்ணம் எல்லாம் காதல் பேச
வண்ணம் கொண்டே வாழ்க்கை மாறும்

பாட்டி சொன்ன பாடம் எல்லாம்
காட்டி விட்டே காலம் செல்ல
காட்டில் நாளும் யுத்தம் என்றே
ஏட்டில் காட்டி எண்ண வைத்தான்





இன்பம் தந்த இந்த வாழ்வை
அன்பு செய்தே ஆழ்வேன் நானே
கண்ணில் வைத்தே காப்பேன் நாளும்
மண்ணில் உள்ள மாந்தர் வாழ்வே



# 12 கள்ளம் இல்லா காதல்



உள்ளம் எல்லாம் உன்னை எண்ண
கள்ளன் என்றே சொல்லிச் சென்றாய்
சின்னக் காதல் சிட்டாய் இங்கே
அன்பே என்னை ஆட்டி வைத்தாய்

கள்ளம் இல்லா காதல் தன்னில்
உள்ளம் எல்லாம் கன்னி நீயே
கள்ளன் என்றே காட்டி விட்டு
முள்ளில் என்னை முட்ட வைத்தாய்

உன்னை எண்ணி உள்ளம் வாட
என்னுள் நானே ஏங்கி நின்றேன்
கண்ணில் நித்தம் கண்ணீர் பெண்ணே
மண்ணை விட்டே மாள்வேன் நானே



# 13 காதலைச் சொல்லிடு

நாட்டியம் ஆடிடும்
நங்கையின் கால்களும்
பாட்டியின் பாட்டினில்
பரவசம் கொண்டதே

நாட்டியம் பேசிடும்
நவரச கண்களும்
நாட்டினை ஆண்டிட
நாளுமே துடிக்குதே

முத்திரை காட்டிட
முந்திடும் கைகளும்
பத்திரம் என்றதே
பாமரன் மனதினை

காதலைச் சொல்லிடும்
கன்னியின் உள்ளமும்
சாதலை வென்றே
சரித்திரம் படைக்குதே



# 14 பெண்ணே எழுந்திடு



பெண்ணே நீயும் பொம்மை இல்லை
விண்ணை வென்றிடும் விம்மிதம் நீயே
தைரியம் கொண்டே தைத்தியரை வென்றிடு
உரிமை வேண்டியே உலகை காத்திடு
தாழ்ச்சி கொண்டே தடைகள் உடைத்திடு
வீழ்ச்சி என்பதை விரட்டியே விட்டிடு
மங்கை நீயே மகத்துவம் கொண்டவள்
சங்கை முழங்கியே சரித்திரம் படைத்திடு

அன்பே உந்தன் ஆயுதம் உணர்ந்திடு
என்றும் நீயே ஏற்றம் கண்டிடு
சிங்கப் பெண்ணாய் சீற்றம் கொண்டிடு
எங்கும் உன்னை எழிலாய் மாற்றிடு
உன்னை வணங்கும் உலகம் நாளும்
என்றும் நீயே எழுமை காண
பெண்ணே நீயே பொங்கியே எழுந்திடு
மண்ணில் நாளும் மல்லல் காட்டிடு
உன்னால் முடியும் உரிமை வென்றிடு
அன்னையாய் மதிக்கும் அவனியும் உன்னையே



15

# உணர்வாய் நீயும்

அ ரிக்கண் லாம்பு அணைந்தே கிடக்க



கரியாய் மாறிய காட்சி காண்பாய்
பழமை மாறியே பாதை நடக்க
குழகன் வாழ்வும் குடிசை வெறுக்க
தமிழர் பண்பாடு தரணி மறந்தே
அமிர்தம் என்றே ஆங்கிலம் பேச






அம்மா என்ற அழகிய சொல்லும்
மம்மி என்றே மயானம் ஆனதே
அன்பு பகிர்ந்த அயலவர் முகமும்
துன்பம் கண்டும் தூரம் போகுதே
பாட்டி சொன்ன பாடம் எல்லாம்
ஏட்டில் மட்டும் எழுத்தாய் ஆனதே



கூட்டாச் சோறு கூட்டாய் சமைத்த
கூட்டு வாழ்க்கை குழைந்தே போனதே
தனிமை மட்டும் தரணி என்றே
மனித வாழ்க்கை மாறியே விட்டதே
உணருமா எங்கள் உலக மக்கள்



உணர்வின் இன உரிமை என்றே
தமிழர் வாழ்வை தரணி போற்ற
தமிழா நீயே தடைகள் உடைத்திடு
வெற்றி உனதே வென்றே காட்டிடு
மாற்றம் வரும் மண்ணில் என்றே

# 16 ஈழ தேசத்தின் கனவுகள்



உயிராய் தமிழை உணர்வில் ஏற்றி
உயிரை இழந்தோம் உறவுகள் வாழ
அன்பை மறந்து அன்னை மடியாய்
இன்பம் கொண்டே இனிமையாய் வாழ
படைப்போம் ஈழம் பாரில் என்றே
தடைகள் தாண்ட தனையனாய் வந்தோம்



கனவு சுமந்த காதல் கொண்டே
தினமும் வாழ்வில் திறமை வளர்க்க
தமிழன் என்றே தலையும் நிமிர்ந்து
தமிழின் உணர்வுடன் தரணியில் நின்றோம்
என்றும் ஈழம் எங்கள் கனவு
என்றே உணர்வை ஏற்றே வாழ்வில்

மடித்த உறவை மனதில் ஏற்று
அடிமை விலங்கை அவனியில் உடைப்போம்
உரிமை எனும் உணர்வாய் எழுத்தை
வரியாய் மாற்றி வரலாறு படைக்கவே

இதுவே கனவு இழந்ததை மீட்க
அதுவே படைக்கும் அன்பாய் ஈழத்தை
தனித்தவன் இல்லை தமிழன் என்றே
தனித்துவம் கொண்டே தரணியில் காட்டிடு



# 17 அன்னை வடிவே

அன்னை உந்தன் உருவாய்
அகிலம் தருமே வாழ்வை
இன்பம் தரும் உலகில்
இயற்கை காத்தல் நன்றே
உன்னை உயர்த்த நாளும்
உயிரை உவந்தே தருமே
சின்ன சிட்டாய் உலகில்
சிரித்தே வாழ்வாய் நீயும்



இயற்கை இன்பம் தருமே
இனிமையாய் அதையும் தொழுதால்
இயற்கை வளத்தை காத்தால்
இளமை வாழ்வும் பெறுவாய்
செயற்கை உரத்தை அழித்தால்
செயலில் வெற்றி காண்பாய்
முயற்சி செய்தே வாழ்வில்
மூசல் தினமும் வெல்வாய்



அன்னை வடிவாய் இயற்கை
அன்பு செய்யும் உன்னை
என்றும் நீயே உணர்ந்து
எழிலாய் காப்பாய் வாழ்வில்
இன்பம் கொண்டே ரசித்தால்
இனிமை உனக்கே தருமே
அன்பாய் இயற்கை வளத்தை
அவனியில் காத்திடு நாளும்

18


# உணர்வீர் வாழ்வில்

மொழியின் புனிதம் மறந்து
மொழியில் கலப்படம் செய்தே
அழிக்கும் கயவர் உணர்வீர்
அழியா மொழி தமிழே
எழிலும் கொஞ்சும் இனிய
எங்கள் தாயும் அதுவே
அழிக்கும் உங்கள் எண்ணம்
அழித்தே வெல்லும் நாளும்

மண்ணும் புகழ வாழ்வில்
மனிதர் போற்றும் மொழியே
விண்ணும் வியக்கும் எங்கள்
விந்தை நிறைந்த தாயே
மண்ணில் அதையும் உணர்ந்தே
மான்பைக் காப்போம் என்றும்
வண்ணம் கொண்ட மொழியை
வாழ்த்தி இங்கே காப்போம்
அன்பைச் சொல்லித் தருமே



அழகு மொழி தமிழாம்
துன்பம் நீக்கி வாழ
துணிவு காட்டிய மொழியாம்
இன்பம் கொண்டே நீயும்
இலக்கண மொழியைக் காப்பாய்
என்றும் அதுவே உன்றன்
எழிலை கூட்டும் அறிவாய்



# 19 உறவு வாழ்வின் கருவறை அன்பியம்

அன்பு பிறந்தது அன்பிய வாழ்வில்
என்றும் இணைந்தது என்றன் நெஞ்சில்
உள்ளம் கலந்தது உறவு என்றே
பள்ளம் எல்லாம் பாதை ஆக்கி

இறைவன் காட்டிய இனிய அன்பை
பறை சாற்றியே பாசத்தை பகிர்ந்திடும்
உண்மை நிறைந்த உன்னத பயணம்
மண்ணில் இன்று மாட்சி ஆனதே

அன்பின்யம் எனும் அன்பின் பயணம்
இன்பம் தந்தே இறைவனில் இணைக்குதே
துன்பம் வந்தே துவட்டும் வேலையில்
அன்பை தந்தே இணைந்தே காக்கிறேதே




மனதினில் இங்கே மாற்றத்தை விதைகுதே
சினத்தை அகற்றி சிந்திக்க வைத்ததே
விவிலிய வார்த்தையில் விருந்தை தந்ததே
புவியில் வாழ்க்கை புகட்டியே விட்டடேதே

அன்பின் இல்லம் அன்பியம் என்பேன்
என்றும் நிலைக்கும் என்றன் வாழ்வின்
அடையாளம் இறைவன் அன்பில் கண்டே
படைத்தோம் அன்பியப் பாதையில் வாழ்வினையே



குடும்ப வாழ்வில் குழப்பம் அகற்றி
வடுக்கள் இல்லா வசந்தம் கொடுத்து
ஒழுக்க இங்கே ஓதியே நின்று
அழுக்கை மனதில் அகற்றிடும் பயணம்

இறைவனின் சாட்சியாய் இன்பமாய் வாழ
சிறையினை அகற்றிடும் சிந்தனை வாழ்வை
அன்பினால் தந்திடும் அன்பிய வாழ்வு
என்றும் வாழ்வை ஏற்றியே நிற்குமே



ஆண்டவன் யேசுவின் அன்பு பயணத்தை
காண்பதற்காய் இணைந்த கருணை பயணம்
மண்ணில் வாழும் மாட்சியின் காலம்
விண்ணிலும் இறைவனை வியக்கவே வைக்குமே

அன்பியம் என்பது அன்பின் இல்லம்
என்றும் இறைவன் எம்முடன் வாழும்
கருணை நிறைந்த காட்சியின் உள்ளமாய்
உருவம் மாற்றும் உன்னத பயணம்

கருவில் சுமந்த கருணையின் அன்பை
உருவம் தந்ததே உறவான அன்பியம்
இறைவன் வாழும் இனிமையின் இல்லம்
மறையை பரப்பிடும் மகத்துவ அன்பியம்

அன்பே வாழ்வு அன்பே இறைவன்
என்றும் இணையும் ஏழையின் உள்ளம்
இன்பம் பகிரும் இனிமையின் திருச்சபை
அன்பை அணைக்கும் அன்பிய வாழ்வு



# 20 நினைத்தால் மட்டும் இனிமை

கூட்டாய் வாழ்ந்த காலம்
குடும்ப வாழ்வில் இல்லை
ஏட்டில் மட்டும் எழுதும்
எங்கள் வாழ்க்கை ஆச்சு
பாட்டை சொல்லித் தரும்
பாட்டி வீட்டில் இல்லை
காட்சி மாட்டும் நாட்டில்
காலம் மாறிப் போச்சு



அன்பு என்றே அணைக்கும்
அயலார் முகமும் அறியேன்
என்றன் வாழ்வும் இன்று
ஏழிழை மறந்தே போச்சு
அன்னை வேலை செல்ல
அணைக்க யாரும் இல்லை
இன்பம் இல்லா வாழ்க்கை
இதுவே நிரந்தரம் ஆச்சு



**கூட்டாய் வாழ்ந்த காலம்**
**குடும்ப வாழ்வில் இல்லை**
**ஏட்டில் மட்டும் எழுதும்**
**எங்கள் வாழ்க்கை ஆச்சு**
**பாட்டை சொல்லித் தரும்**
**பாட்டி வீட்டில் இல்லை**
**காட்சி மாட்டும் நாட்டில்**
**காலம் மாறிப் போச்சு**



**அன்பு என்றே அணைக்கும்**
**அயலார் முகமும் அறியேன்**
**என்றன் வாழ்வும் இன்று**
**ஏழிழை மறந்தே போச்சு**
**அன்னை வேலை செல்ல**
**அணைக்க யாரும் இல்லை**
**இன்பம் இல்லா வாழ்க்கை**
**இதுவே நிரந்தரம் ஆச்சு**





# 21 சிறையை அகற்றிவிடு

அன்னை என்றன் தவிப்பு
அழுகையின் சிறையை தரவே
என்றன் பிள்ளை காப்பான்
என்றே கூறிய வார்த்தை
இன்று வாழ்வில் இடியாய்
இதய துடிப்பை நிறுத்திடவே
அன்பைத் தொலைத்து தெருவில்
அனாதை போல வாழ்கிறோம்



பன்னீர் குடத்தில் காத்த
பாசம் மறந்தே பிள்ளை
அன்பை உதறித் தள்ள
அணைத்த பாசத் தவிப்புடன்
இன்பம் மறந்தே வாழ்வில்
இன்றும் கண்ணீர் வடிக்கிறோம்
என்றன் பிள்ளை வருவான்
என்றே நாளும் எண்ணி



பாசம் மறந்தே பிள்ளை
பணத்தை விரும்பிச் செல்ல
மாசம் கடக்கும் போது
மனதின் வலிகள் புரியும்
தேசம் கடந்து உழைத்தும்
தொலைத்தே விட்டாய் அன்பை
பாசம் என்றும் மாறாது
பாரில் நீயே பிள்ளை



என்னை மறந்த உன்னை
என்றும் மறவேன் நானே
அன்பாய் கருவில் சுமந்த
அன்னை நானே அறிவாய்
உன்றன் பிள்ளை வாழ்வில்
உன்னை மறக்க முன்னே
உன்றன் வாழ்வை மாற்றி
உலக சிறையை அகற்று

## 22 கள்ளமில்லா மனது



கண்மணி உன்னையே உயிராய்
காதல் செய்கிறேன் நானும்
மண்ணிலும் பிரமன் படைத்த
மாபெரும் தேவதை நீயோ
விண்ணும் வியக்கும் அழகியே
விந்தை செய்தாய் நெஞ்சில்
எண்ணம் எல்லாம் உன்னையே
எண்ண வைத்தது ஏனோ

காதல் கொண்டே வாழ்வில்
கண்ணே உனக்காய் வாழ்கிறேன்
காதலின் வலியை சுமந்தே
சயனம் இன்றியே நாளும்
மோதல் கொள்கிறது உள்ளம்
மோகினி உந்தன் அன்பாள்
பாதகம் செய்கிறாய் நீயும்
பாசம் காட்டியே என்னை



கள்ளம் இல்லா மனதை
கருக்கியே போட்ட தேவதையே
அள்ளித் தந்தேன் அன்பை
அணைப்பாய் என்றே நாளும்
முள்ளாய் வந்தே என்னை
முடக்கியே விட்டுச் சென்றாய்
கள்ளி என்றன் நெஞ்சில்
காதலை விதைந்தே இன்று





## 23 அன்னை உருவாய்

நட்பாய் வாழும் உறவு
நாளும் தருமே இனிமை
சிட்டாய் பறக்க வாழ்வில்
சிகரம் காட்டும் அதுவே
திட்டம் போட்டே நட்பின்
திறமை வளர்க்கும் காண்பீர்
முட்கள் கடக்க நாளும்
முன்னே செல்லும் அதுவே

துன்பம் மறக்க செய்தே
துணிவைத் தருமே நட்பு
இன்பம் என்றே வந்தால்
இணைந்தே மகிழும் அதுவே
அன்பை வாழ்வில் நாளும்
அள்ளித் தருமே காண்பாய்
உன்னை உயர்ந்த நாளும்
உருகி உழைக்கும் அதுவே



அன்னை உருவாய் நாளும்
அணைத்து காக்கும் சொந்தம்
புன்னகை சிந்த வைத்தே
பூவியில் மகிழும் தந்தை
என்றும் காண்பாய் நீயும்
ஏழை உருவில் நின்றும்
உன்னைக் காக்கும் நட்பில்
உணர்ந்தே காப்பாய் அதையும்





# 24 யார் உண்டு

உதவி செய்ய கேட்டால்
உதவ உறவே இல்லை
உதவி என்றே வந்தால்
உதைந்தே தள்ளும் காண்பாய்
உதவும் மக்கள் மனமும்
உடைந்தே இன்று கிடக்க
உதவி கேட்டே நீயும்
உணர்வை இழந்தே விடாதே



துணிவு கொண்டே நீயும்
தூரம் சென்று காட்டு
பணிந்தே உன்னைத் தேடும்
பாசம் என்றே வந்து
பணியைச் செய்தே உன்னை
பணிய வைக்க பாக்கும்
துணிந்தே நின்றே வாழ்வில்
துள்ளிக் குதித்து ஓடு



உன்னை எதிர்த்தே நின்றாள்
உயர்ந்தே பதிலாய் மாறு
துன்பம் என்ற சொல்லில்

துணிவை உன்னில் ஏற்றே
இன்பம் கொண்ட வாழ்வின்
இருளை நீயும் அகற்று
அன்னை தந்த அன்பை
அவனியில் நாளும் கொடுத்தே

உதவி செய்தே காட்டு
உதவ மறுத்தவர் முன்னே
உதவி என்றே வந்தால்
உயிரை நீயும் கொடுத்தே
உதவி செய்தே காட்டு
உணரும் அந்த நொடியில்
உதவா உள்ளம் வாழ்வில்
உணர்ந்தே நீயும் செய்திடு



# 25 எந்தன் பயணம்

தேடித் தேடிக் கண்டேன்
தொடரும் எந்தன் பயணம்
படித்து வந்த பொழுதில்
பாவே எனக்கு துணையே
வாடி நின்ற பொழுதில்
வரிகள் வருமே தினமும்
ஓடி வந்தே அணைத்தேன்
ஓங்கும் எங்கள் தமிழை



கவியின் வரிகள் நாளும்
கனிவைத் தருமே வாழ்வில்
புவியின் சரிதை யாவும்
புலவன் ஆசி பெற்றே
கவியாய் நானும் எழுத
கருத்தை தருதே வாழ்வில்
ஆவி பறக்க முன்னே
அன்பால் அணைப்பேன் வரியால்

அன்னை தந்த வாழ்வும்
அன்னைத் தமிழை வாழ்த்த
என்றன் வாழ்வில் என்றும்
எந்தன் ஈழப் புகழை
இன்பம் கொண்டே நாளும்
இனிய தமிழில் படைப்பேன்
துன்பம் கொண்ட வடுக்கள்
துணிந்தே படைப்பேன் கவியில்



# 26 ஆயுதம் ஒன்று

புதிதாய் கற்பனை பூத்தது இங்கே
மதியை நாளும் மகிழ்வுற செய்தே
ஆயுதம் ஒன்றை அன்பாய் திறக்க
பாயுது இங்கே நெஞ்சில் இன்று
கேள்விகள் நாளும் கேட்டே என்னை
அள்ளி அணைக்குதே அன்பாய் என்னை
புத்தகம் இங்கே புரட்டிப் பார்க்க
பித்தனாய் என்னை பிடித்தே வைக்க
யுத்தம் செய்யுதே யூகியாய் மாற்ற
முத்தாய் மாறுதே முழுமதி போல

என்னை ஆளுதே ஏணியில் ஏற்ற
அன்பைத் தந்ததே அவணியில் வாழ
மண்ணில் நாளும் மடமை ஒளித்தே
கண்ணில் கட்டுதே கருணையின் பயணம்
மனிதம் மறந்த மனிதர் மனதில்
புனிதம் நாளும் புகட்டியே நிற்க
புத்தகம் இங்கே புதியதை சொல்ல
வித்தகன் ஆகிறேன் விண்ணைத் தொடவே
மடமை நிறைந்த மண்ணில்
உடமை உனக்கு புத்தகம் காண்



# 27 தெய்வம் நீயே

க ருவறை சுமந்து கனிவுடன் எனக்காய்
உருவம் தந்த உத்தமி உன்னை
தெய்வமாய் நாளும் தொழுதே காப்பேன்
பொய்மை இல்லா பொக்கிஷம் நீயே
என்னை ஆளும் என்றன் உறவே
உன்னை நானும் உயிராய் எண்ணி
உவகை கொள்வேன் உன்றன் மகனாய்
அவனியில் நானும் அன்பைத் தரவே
என்னை வாழ்வில் ஏற்றி விடவே
அன்பை தந்தே அனைக்கும் உயிரே
உன்னை நானே உவந்தே வணங்கினேன்
என்றும் வாழ்வின் ஏழிலே நீயே
கருணை வடிவே கலங்கரை விளக்கே
உருவம் தந்த உலகம் நீயே
என்னை ஆளும் என்றன் தாயே
அன்பாய் வணங்கினேன் அணைத்தே உன்னை



# 28 மூச்சிலும் பேச்சிலும் முகவரி தமிழே

அமுதே தமிழே அன்னை நீயே
உன்னால் நானே ஊக்கம் கொண்டேன்
இன்பம் தந்தே இன்னல் தீர்ப்பாய்
உன்றன் ஊக்கம் ஊட்டி விட்டே .

மாட்சி தந்தே மாந்தர் வாழ்வில்
காட்சி நாளும் காணச் செய்தாய்
ஆட்சி செய்தே ஆளும் தாயே
ஏட்டில் நீயே எழுத்தும் ஆனாய் .



இன்ப தந்தே ஈழம் காத்த
வன்னி மண்ணின் வாழ்வு நீயே
என்னை ஆளும் என்றன் தாயே
என்றும் நீதான் என்றன் மூச்சே .

கண்கள் நித்தம் கண்ணீர் சிந்த
மண்ணில் உன்னை மாந்தர் ஏற்றோம்
விண்ணும் உன்றன் வீரம் சொல்ல
திண்ணம் கொண்டோம் தீமை வெல்ல .



யுத்தம் செய்தே யூகி ஆனோம்
சத்தம் இட்டே சாட்சி ஆனோம்
கொத்தாய் வந்தே கொட்டி நிற்க
வித்தாய் மாறி வீரன் ஆனோம் .



அந்தம் இல்லா அன்னை நீயே
வந்தோம் நாமும் வாழ்வைக் காக்க
நித்தம் நெஞ்சில் நின்ற உன்னை
முத்தம் தந்தே முத்தாய் காப்போம் .

என்னை ஆளும் என்றன் தாயே
இன்பம் தந்த ஈசன் நீயே
உன்னை நாவில் ஊட்டி காத்தாய்
என்னை வாழ்வில் எற்றி விட்டாய் .




பன்னீர் தூவிப் பாடி நின்றேன்
என்னை ஆளும் என்றன் தாயே
சின்னப் பிள்ளை சிட்டாய் வாழ
துன்பம் நீக்கித் தூக்கும் தாயே .

கண்ணில் உன்றன் காட்சி நாளும்
மண்ணில் வாழும் மாதா உன்னால்
கண்டம் எல்லாம் காக்கும் தாயே
வண்ணம் கொண்டே வாழ்வாய் நீயே .

வாழ்க தாயே வாழ்க நீயே
வாழ்க்கை உன்றன் வண்ணம் தானே
வாழ்க என்றே வாழ்த்துப் பாட
வாழ்க தாயே வாழ்க நீயே .



# 29 அன்பால் இன்று

புகழைத் தேடா பூகமாய் பறக்கிறேன்
சுகத்தை மறந்தும் சுமைகள் தாங்கியே
பணியை வாழ்வில் பணிந்தே செய்தே
துணிகரம் கொண்டே துன்பு நீக்கினேன்
அன்பைத் தேடியே அகிலமும் அறிந்தேன்
என்னை வந்தே ஏமாற்றம் அணைத்திட
வரிகளை கிறுக்கினேன் வலிகள் நீக்கவே
உரிமை குரலினை உலகில் கொடுத்துமே
தடைகளை கண்டேன் தனிமை கொண்டுமே
சாதிக்க எண்ணினேன் சாதனை பாதையில்
துரோகம் வந்ததே துயரைத் தரவே
உறவை நேசித்தேன் உணரும் என்றே
புறத்தை பேசியே புரட்டியே போட்டதே
பொய்மை கண்டேன் போலி உலகில்
வாய்மை எல்லாம் வசையாய் மாறிட
உலகை தேடினேன் உண்மையை கண்டிட
கலங்கம் நீக்கியே கருணை நிறைத்திட
மனிதம் கொண்ட மகத்துவ வாழ்வை
புனிதம் கொண்டே பூமியில் நானும்
அன்பால் என்றும் அணைத்தே வாழ்வில்
இன்பம் தருவேன் இனிமை கொண்டே



# 30 தாயே மன்னித்து விடு

கருவறையிலே எட்டி உதைத்தே
வலிகள் தந்தே உன்னை
மறுபிறவி எடுக்க வைத்தேன்
தாயே என்னை மன்னித்து விடு

மடியினில் தவளும் பொழுதிலும்
அழுகைக் குரல் கொடுத்து
தூக்கத்தை பறித்தே நின்றேன்
தாயே என்னை மன்னித்து விடு




பள்ளி செல்லும் வேலையில்
வறுமையை உணராமல் நானும்
அடம் பிடித்தே வருத்தினேன்
தாயே என்னை மன்னித்து விடு

கஷ்டங்கள் பட்ட வேலையிலும்
சிறுவன் நான் என்றே
கடந்த அந்த பொழுதுக்காய்
தாயே என்னை மன்னித்து விடு

அறிவுரை சொல்லியே என்னை
தடுத்த அந்த வேலையிலும்
வார்த்தைகளால் காயப்படுத்திய
பொழுதுக்காய் தாயே என்னை மன்னித்து விடு

கல்வியில் சாதிப்பான் என்ற
உந்தன் கனவை நண்பர்களின்
வினையின் செயலால் உடைத்தமைக்காய்
தாயே என்னை மன்னித்து விடு



வினைவினால் என்னை அறியாமல்
என்னை வருத்திய பொழுதில்
எனக்காய் சிந்திய கண்ணீருக்காய்
தாயே என்னை மன்னித்து விடு

சாதிக்க எண்ணிய பொழுதுகளில்
துரோகத்தால் நானும் வீழ்த்தப்படுகையில்
நீ பட்ட வேதனைக்காய்
தாயே என்னை மன்னித்து விடு



தடைகள் தந்தே என்னை
நோயினால் வாட வைத்த
பொழுதில் என்னை வருத்தியமைக்காய்
தாயே என்னை மன்னித்து விடு

உனக்கு அறியாமல் நானும்
செய்திட்ட குற்றங்கள் அத்தனைக்காகவும்
நீ வருத்தும் பொழுதுக்காய்
தாயே என்னை மன்னித்து விடு

வேலை இன்றி நானும்
உன்னை காக்க முடியாமல்
இருக்கும் இந்த பொழுதுக்காய்
தாயே என்னை மன்னித்து விடு



தாயே எத்தனை மன்னிப்பு
உன்னிடம் கேட்டாலும் நீ
தியாகம் என்றே கூறிடுவாய்
தாயின் அரவணைப்புடனே இன்றும்

தாயே உன்னை காப்பேன்
கண்ணீர் துடைத்தே நாளும்
என் வலிகளும் சுகமாகும்
எனக்காக காத்திரு புன்னகைப்போம்

வலிகளை மட்டும் சுமக்கிறேன்
நான் என்றே நீயும்
உதட்டினால் புன்னகை சிந்தி
மனதால் வழிக்கும் கண்ணீர்
மறைத்தாலும் அறிவேன் தாயே

உன் பிள்ளையாய் வாழ்வில்
மனதே வலிகளால் நிறைந்தாலும்
புன்னகைப்பேன் நானும் தாயே
மகிழ்ந்தே இரு சாதிப்பேன் உன் பிள்ளை

கலங்காதே காத்திடுவேன் உன்னை.
கண்ணின் மணியாக நித்தம்
என்னுடன் வைத்தே காத்திடுவேன்



# நூலாசிரியர் பற்றி....





தமிழ் இலக்கிய வளர்ச்சியில் இலங்கைத் தமிழர்களின் பங்கு அளவிட இயலாத ஒன்று. அவ்வப்போது இலங்கையில் உணர்வுப் பூர்வமான கவிஞர்கள் தோன்றிக் கொண்டே தான் உள்ளனர். அவர்களில் ஒருவராக. துடிப்புள்ள இளங்கவிஞராக. தமிழ் உணர்வாளராக. யாப் பறிந்து கவிபுனையும் ஆற்றல் கொண்டவராகத் தன்னை வளர்த்துக் கொண்ட ஓர் கவிஞராகத் திகழும் கவிஞர் பாரதிமைந்தன் அவர்களே சயனம் மறந்த பொழுதுகள் என்ற இந்நூலின் ஆசிரியர்.

அருள்தாஸ் கிளைம்சன் என்ற இயற்பெயரைக் கொண்ட பாரதிமைந்தன் ஆசிரியர் பயிற்சி பெற்ற ஒரு சமூக சேவகராக மட்டுமல்லாது ஆசிரியர்தினக் கவிதைப் போட்டியில் பங்கு பெற்று. பரிசுபெற்றதால் ஒரு கவிஞராகவும் தன்னை அடையாளப்படுத்திக் கொண்டவர். சமூக ஏற்றத்தாழ்வுகளைக் கண்டு வெகுண்டெழுவதோடு மட்டுமல்லாது அவற்றை வெளிப்படுத்தும் கவிதைகளை யாத்தளிக்கும் கவிஞராக. தமிழுணர்வினைத் தட்டி எழுப்பும் கவிஞராகத் தன்னை வெளிக்காட்டும் கவிஞர் நவீனக் கவிதைகள் மரபுக்கவிதைகள் மட்டுமல்லாது திரையிசைப் பாடல்கள் எழுதும் திறனும் கொண்டவர். செந்தமிழ்க்கவிஞர். கவிஅரிமா. மரபொளிர் கவிஞர். நிலாக்கவிஞர் உள்ளிட்ட எண்ணற்ற விருதுகளை இலங்கையைக் கடந்து இந்தியா போன்ற பிறநாடுகளில் பெற்றவராகத் திகழ்கிறார். மாவட்ட அளவில் இலக்கியச்சுடர் விருதினைப் பெற்றவர்

உணர்வுகளுன் பாதை மற்றும் துளிர்விடும் கனவுகள் ஆகிய நூல்களை ஏற்கனவே வெளியிட்டுள்ளார். கவிதை உலகைத் தாண்டிச் சமூக சேவையாற்றும் துடிப்பான இளைஞரான கவிஞர் பாரதிமைந்தன் மென்மேலும் வளர்ந்து தமிழ் இலக்கிய உலகில் சிறப்பான இடத்தைப் பெற இனிதே வாழ்த்துகிறேன்.

**தமிழ்ச்செம்மல் பாவலர்மணி**
**இராம வேல்முருகன் வலங்கைமான்**
**தமிழ்நாடு 612804**
**9952529619,934551569**

ISBN 978-624-99173-0-9
9786249917309

300/=

தீபம் பிறிண்டேர்ஸ்,யாழ் 0772506234